DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 21/2018**

அ.சா.11

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | Dr. பாலமுருகன் | Caste: | |
| Father's Name: | ஆர். மருதமுத்து | Calling: | மருத்துவர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 45 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 21.11.2025

( 1ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

**முதன்மை விசாரணை**

நான் தற்போது தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் எம்டி உடற்கூரியியல் மூன்றாமாண்டு படித்து வருகிறேன். கடந்த 16.01.2017ம் தேதி காலை 11.40 மணியளவில் நான் திருவாடானை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது திருவாடானை தாலுகா பானனேந்தல் கிராமத்தை சேர்ந்த மாரி மகன் முத்து என்பவர் தன்னை தெரிந்த நான்கு நபர்கள் மற்றும் தெரியாத 10 நபர்கள் இரும்பு ராடால் தாக்கியதால் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சைக்கு வந்ததாக கூறினார். அவரை பரிசோதிக்கையில் அவரது முன்னந்தலையில் வீக்கம் இருந்தது. அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து அனுப்பி வைத்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என நான் காயச்சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் காயச்சான்று நான் வழங்கியதுதான். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.11**. அதே தினம் அதே 11.40 மணிக்கு

சோனைமுத்து மனைவி கலா என்பவர் தன்னை தெரிந்த நான்கு நபர்களும் அடையாளம் தெரியாத 10 நபர்களும் கம்பால் தாக்கியதாக சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதிக்கையில் எந்தவெளிப்புற காயங்களும் காணப்படவில்லை. அவரை வெளிநோயாளியாக சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.12**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

இரும்பு ராடால் தலையில் ஓங்கி அடித்தால் வெட்டுக்காயம் போல் தோற்றம் அளிக்கக்கூடிய காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். அந்த காயத்தின் அளவுகளை விபத்து பதிவேட்டில் நான் குறிக்கவில்லை என்றால் சரிதான். வீக்கக்காயம் இரத்தக்கட்டுடன் கூடிய வீக்கக்காயமாகவும் இருக்கலாம் இரத்தக்கட்டில்லாத வீக்ககாயமாகவும் இருக்கலாம் என்றால் சரிதான். இரத்தக்கட்டுடன் உள்ள வீக்கக்காயத்திற்கு நிறம் இருக்கும் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு அறிக்கையில் இரத்தக்கட்டுடன் கூடிய வீக்கக்காயமாக இருந்தது என்றோ அல்லது என்ன நிறத்தில் இருந்தது என்றோ குறிப்பிட்டு குறிக்கவில்லை என்றால் சரிதான். வீக்கக்காயத்தின் அளவுகள் குறிக்கவில்லை என்பதால் அது சிறிய வீக்கக்காயமாக இருக்கலாம் என்றால் சரிதான். சிறிய வீக்கக்காயமாக இருந்தால் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு பின்னால் அது தானாகவே மறைந்துவிடும் என்றால் சரிதான். ஒரு கடித

தன்மையுள்ள பகுதியில் மோதினால் நான் குறிப்பிட்டுள்ள வீக்ககாயம் ஏற்படும் என்றால் சரிதான்.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 21/2018**

அ.சா.12

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கணேசன் | Caste: | |
| Father's Name: | சிங்கராஜ் | Calling: | சார்பு ஆய்வாளர் ஓய்வு |
| Village: | காடர்ந்தகுடி | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 62 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 21.11.2025

( 1ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355–ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

**முதன்மை விசாரணை**

நான் திருவாடானை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து 31.01.2023ம் தேதி ஓய்வு பெற்று என் சொந்த ஊரான பரமக்குடி தாலுகா காடர்ந்தகுடி கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 16.01.2017–17.01.2017 இரவு பணியில் நான் திருவாடானை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக அன்று இரவு 1.00 மணியளவில் பணியில் இருந்தபோது திருவாடானை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின்பேரில் அங்கு சிகிச்சையில் இருந்து பானனேந்தல் கிராமத்தை சேர்ந்த மாரி மகன் சோனைமுத்து என்பவர் விசாரித்து அவர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து படித்து காண்பித்து கையெழுத்து பெற்று பின் நிலையம் வந்து திருவாடானை காவல்நிலைய கு.எண். 12/2017 சட்டப்பிரிவுகள் 294(b), 324, 307IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான்

பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.13.** பின்பு புகார் வாக்குமூலத்துடன் முதல் தகவல் அறிக்கையின் அசலை திருவாடானை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை காவல் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். இதுசம்பந்தமாக திருவாடானை டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

புகார் எழுத்து மூலமாக கொடுக்கப்படவில்லை வாக்குமூலமாக கொடுக்கப்பட்டது. திருவாடானை அரசு மருத்துவமனை அருகே தான் காவல்நிலையமும் உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை தயார் செய்ய எவ்வளவு நேரம் ஆனது என்றால் ஒரு மணி நேரம். சம்பவ காலத்தில் காவல்நிலையத்திற்கும் திருவாடானை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் சுமார் 200 மீ தூரம்தான் இருக்கும் என்றால் சரியல்ல, அரை கி.மீ தூரம் இருக்கும். ஏற்கனவே இருந்த கிளைச் சிறை திருவாடானை காவல்நிலையத்தை ஒட்டியே இருந்தது என்றால் சரிதான். 2017 ம் காலகட்டத்தில் திருவாடானை காவல்நிலையம், நீதிமன்றம் மற்றும் கிளைச்சிறை ஆகிய மூன்றும் ஒரே வளாகத்தில் இருந்தது என்றால் சரியல்ல. காவல்நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு 15 நிமிடங்களில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். வழக்கு புகார் 17.01.2017 அன்று மாலை 4.00 மணியளவில்தான் காவல்துணைக் கண்காணிப்பாளரின் ஆலோசனையின்பேரில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால்தான் புகார் 17.01.2017 ம் தேதி மாலை 6.30 மணியளவில் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 17.01.2017 அன்று 2 ம் எதிரி சண்முகம் காயம்பட்ட நபர்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது நான் பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கை

பின்னிட்டு ஆலோசனையின்பேரில் தயாரிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)